வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-ரோஷ்னா காசிம்

தேதி 15.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜார்கண்ட் மாநிலம் டாடா நகரில் 660 கோடிக்கும் அதிக மதிப்பிலான ரயில்வேத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, வேறு பல திட்டங்களை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார்.
- ஓணம் பண்டிகை கொண்டாட்டத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் குடியரசுத் துணைத் தலைவர் பிரதமர் உள்ளிட்டோர் கேரள மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- விவசாயிகளின் வருமானம், ஊரக வேலை வாய்ப்புகள் போன்றவற்றை அதிகரிக்க, மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- புதுச்சேரியில் குரங்கம்மை தடுப்பு வழிமுறைகள் குறித்த சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் இன்று இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் நடைபெற்றது.

--------------------------------

***ஜார்கண்ட் 1 (18)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று, ஜார்கண்ட் மாநிலம் டாடா நகரில் 660 கோடிக்கும் அதிக மதிப்பிலான ரயில்வேத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, நிறைவடைந்த வேறு பல பணிகளை நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். நிகழ்ச்சியில், ஜார்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்ப்பூரில், 6 வந்தே பாரத் ரயில் சேவையை, பிரதமர் காணொலிக் காட்சி மூலம் கொடியசைத்து தொடக்கி வைத்தார். நிகழ்ச்சியில் பேசிய

அவர், இந்த ரயில் சேவை, இப்பகுதியில் சுற்றுலாவை ஊக்குவிப்பதோடு, டாடா நகரின் தொழில் வளர்ச்சியையும் ஊக்குவித்து, இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார். ஜார்கண்ட் மாநிலத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம், வளர்ச்சியை மேம்படுத்த மத்திய அரசு முதலீட்டை முடுக்கி விட்டுள்ளதாகவும், வளர்ச்சிப் பணிகளின் வேகத்தை அதிகரித்துள்ளதாகவும், பிரதமர் குறிப்பிட்டார். இந்த ஆண்டு பட்ஜெட்டில், ஜார்கண்ட் மாநிலத்தின் ரயில்வே உள்கட்டமைப்பை வலுப்படுத்த, 7 ஆயிரம் கோடிக்கு மேல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நவீன வளர்ச்சி, ஒருசில மாநிலங்களில் மட்டுமே இருந்த காலத்தை நினைவுக் கூர்ந்த பிரதமர், ஜார்கண்ட் மாநிலம் போல, பல மாநிலங்கள் பின்தங்கி இருந்ததையும் அவர் நினைவுக் கூர்ந்தார். அனைவரும்

*__ஜார்கண்ட் 2 (16)__*

இணைவோம், அனைவரும் உயர்வோம் என்ற தாரக மந்திரம், நாட்டின் சிந்தனையையும், முன்னுரிமையும் சிறப்பாக மாற்றி உள்ளதாக பிரதமர் தெரிவித்தார். ஏழைகள், பழங்குடியினர், தலித்துகள், நலிந்தோர், பெண்கள், இளைஞர்கள், விவசாயிகள் ஆகியோரின் நலன், நாட்டின் முன்னுரிமை என்றும், பிரதமர் குறிப்பிட்டார். இன்று, ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு மாநிலமும், போக்குவரத்து இணைப்பை மேம்படுத்த, வந்தே பாரத் ரயிலை விரும்புகின்றன என்றும் பிரதமர் தெரிவித்தார். நிகழ்ச்சியில், பிரதமரின் ஊரக வீட்டு வசதித் திட்ட பயனாளிகள் 32 ஆயிரம் பேருக்கு, வீடு ஒதுக்கீட்டு ஆணையையும் அவர் வழங்கினார். பிரதமரின் வீட்டு வசதித் திட்டத்தில், கழிப்பறை, குடிநீர், மின்சாரம், எரிவாயு இணைப்பு போன்ற வசதிகளும் இடம்பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜார்கண்ட், குஜராத், ஒடிசா ஆகிய 3 மாநிலங்களில், இன்று முதல் 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், நாளை, குஜராத் மாநிலத்திற்கு செல்ல உள்ளார். காந்தி நகரில், பிரதமரின் சூர்ய சக்தி மின் திட்ட பயனாளிகளுடன் அவர் கலந்துரையாட உள்ளாளர். அதன் பின்னர், 4 ஆவது சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீட்டாளர்கள் மாநாட்டையும் அவர் தொடக்கி வைக்க உள்ளார். அத்துடன் அகமதாபாத்

***ஜார்கண்ட் 3 (5)***

மெட்ரோ ரயில் சேவையையும் அவர் தொடக்கி வைத்து, கிஃப்ட் சிட்டி வரை மெட்ரோ ரயிலில் அவர் பயணம் செய்ய உள்ளார். இதுதவிர, சுமார் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளையும் அவர் தொடக்கி வைத்து அடிக்கல் நாட்ட உள்ளார். பின்னர் காந்தி நகரில், மகாத்மா மந்திர் அரங்கில் மறு முதலீடு 2024 மாநாட்டையும் பிரதமர் தொடக்கி வைக்க உள்ளார்.

-----------------------------

***ஓணம் 1 (16)***

ஓணம் பண்டிகை கொண்டாட்டத்தை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் கேரள மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். மலையாள மொழி பேசும் மக்களின் முக்கிய திருவிழாவான ஓணம் பண்டிகை இன்று கோலாகலமாக கொண்டாடப் படுகிறது. இந்தநாளில், கேரளாவை ஆண்ட மகாபலி சக்ரவர்த்தி தமது மக்களை சந்திக்க வருவதை நினைவு கூறப்படுகிறது. அவரை வரவேற்க வீடுகளில் வண்ண மலர்களால் பூக்கோலமிட்டும், 64 வகையான உணவு பதார்த்தங்களுடன் விருந்து படைத்து கேரள மக்கள் இந்த பண்டிகையை கொண்டாடி மகிழ்கின்றனர். ஓணம் பண்டிகையை முன்னிட்டு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வாழ்த்து செய்தியில், பயிர்களை அறுவடை செய்வதை குறிக்கும் வகையில்,

மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தின் வெளிப்பாடாக இந்த பண்டிகை கொண்டாடப் படுகிறது என்றும், கேரளாவின் வளமான, கலாச்சார, பாரம்பரியத்தை கொண்டாடுவதற்கான சந்தர்ப்பமாகவும் இந்த பண்டிகை உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஓணம் 2 (6)

குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், அனைவரின் வாழ்விலும், மகிழ்ச்சியையும், வளத்தையும் இந்நாள் தரட்டும் என்று கூறியுள்ளார்.

ஓணம் பண்டிகையை முன்னிட்டு பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், எங்கும் அமைதி, செழிப்பு, மற்றும் நல்வாழ்வு நிலவட்டும் என்றும், தெரிவித்துள்ளார்.

------------------------------

*பொறியாளர் தினம்-பிரதமர் (19)*

பொறியாளர்கள் தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு அனைத்து பொறியாளர்களுக்கும், பிரதமர் திரு. நரேந்திர மோடி, வாழ்த்து தெரிவித்துள்ளார். உலகம் முழுவதிலும் உள்ள பொறியாளர்களின் பங்களிப்புகள், மற்றும், சாதனைகளை கவுரவிக்கும் வகையில், பொறியாளர்கள் தினம் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்படுத்தவும், கண்டுபிடிப்புகள் மற்றும் முக்கியமான சவால்களை எதிர்கொள்வதிலும், பொறியாளர்களின் பங்களிப்பு முக்கியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். புகழ்பெற்ற இந்திய பொறியாளர் சர்.எம் விஸ்வேஸ்வரய்யாவுக்கு புகழஞ்சலி செலுத்திய பிரதமர், பொறியியல் துறையில் அவரது முக்கிய பங்களிப்புகள் இன்றளவும் தொடர்ந்து ஊக்கம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

முன்னேற்றம், மற்றும், வாழ்க்கையை மாற்றி அமைக்கும் தொலைநோக்குப் பார்வையாளர்கள், சிந்தனையாளர்கள் என பொறியாளர்களுக்கு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் புகழாரம் சூட்டி உள்ளார். பொறியாளர்கள் சிறந்து விளங்க, உத்வேகம் தரும் சர். எம். விஸ்வேஸ்வரய்யாவுக்கு இந்த நாளில் அஞ்சலி செலுத்துவதாகவும் அவர் தமது எக்ஸ் தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

------------------------------

*<u>மோடி-விவசாயி 1 (18)</u>*

விவசாயிகளின் வருமானம், ஊரக வேலை வாய்ப்புகள் போன்றவற்றை அதிகரிக்க, மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசு 3 முக்கிய முடிவுகளை எடுத்துள்ளது. வெங்காயத்தின் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி வரி 20 சதவிகிதம் வரை குறைப்பு, பாஸ்மதி அரிசி மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி வரி நீக்கம், சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரி 32.5 சதவிகிதமாக உயர்வு உள்ளிட்டவற்றிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, பிரதமர் தமது எக்ஸ் வலைதளப் பதிவில், வெங்காயம் மீதான ஏற்றுமதி வரி குறைப்பு, சமையல் எண்ணெய் மீதான இறக்குமதி வரி உயர்வு உள்ளிட்ட மத்திய அரசின் எந்த முடிவுகளும் உணவு உற்பத்தியாளர்களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். விவசாயிகளின் வருமானம், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகள் அதிகரிப்பு உள்ளிட்டவற்றை நோக்கமாகக் கொண்டு இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவிததுள்ளார். நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்காக இரவு பகலாக உழைக்கும் நமது விவசாய சகோதர-சகோதரிகளின் நலனுக்கு தேவையான அனைத்து முயற்சிகளும் எடுக்கப் படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

*மோடி-விவசாயி 2 (13)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ் செயல்படும் மத்திய அரசு, விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இந்த முக்கிய முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். இந்த விளை பொருட்களுக்கு அதிகபட்ச விலை கிடைக்கும் வகையில் ஏற்றுமதியை அரசு அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் இந்த நடவடிக்கையின் மூலம், அனைத்து எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கும் என்று, மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். இந்த முடிவின் மூலம், சோயா உற்பத்தி அதிகரிக்கும் என்றும், அதுதொடர்பான பிற துறைகளுக்கும் நன்மை கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

------------------------------

*அண்ணா பிறந்த தினம்* (10)

தமிழக முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் 116ஆவது பிறந்த தினம், இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி புதுச்சேரி அரசு சார்பில், ஒதியஞ்சாலை சந்திப்பில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள், திரு. திரு. லட்சுமி நாராயணன், திரு. சாய் ஜே. சரவணன் குமார், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. அனிபால் கென்னடி, திரு. சம்பத், திரு. செந்தில் குமார், மாநில திமுக அமைப்பாளர் திரு. சிவா உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து அதிமுக, திமுக, மதிமுக உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்தவர்களும் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

------------------------------

குரங்கு அம்மை (17)

புதுச்சேரியில் குரங்கம்மை தடுப்பு வழிமுறைகள் மற்றும் நெறிமுறைகளை வகுப்பது குறித்து மாநில சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள் தலைமையில் உயர்மட்டக் குழு ஆலோசனைக் கூட்டம் இன்று இந்திரா காந்தி அரசு பொது மருத்துவமனையில் நடைபெற்றது. கூட்டத்தில் துணை இயக்குநர், மருத்துவ கண்காணிப்பாளர், இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லூரி, ஜிப்மர் மருத்துவக் கல்லூரிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். குரங்கு அம்மை என்பது பெரியம்மை போன்ற அறிகுறிகளை கொண்ட வைரஸ் என்றும், இந்த அம்மை நோயானது குறைவான மருத்துவ தீவிரத்துடன் காணப்படுவதாகவும், இது அமெரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. புதுச்சேரியில் குரங்கம்மை நோயில் இருநது பாதுகாத்தக் கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும், நோய் தொற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க 10 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு கோரிமேடு அரசு மார்பக மருத்துவமனையில் தயார் நிலையில் உள்ளதாகவும், மாநில சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

------------------------------

திரைப்பட விழா-கோவா (13)

இந்திய சர்வதேச திரைப்பட விழா, 2024-ன் ஒருபகுதியாக, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை, இளம் திரைப்பட தயாரிப்பாளர்களுக்கு என புதிய பிரிவு ஒன்றை உருவாக்கி உள்ளது. வருகிற நவம்பர் மாதம் கோவாவில் நடைபெற உள்ள 55ஆவது சர்வதேச திரைப்பட விழாவின் போது, சிறந்த புதுமுக இந்திய திரைப்படப் பிரிவு 2024 என்ற பெயரில் இந்த புதிய பிரிவு அறிமுகப்படுத்தப் படுவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இப்பிரிவு மூலம், நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த திரைப்பட மற்றும் பல்வேறு வகைப்பட்ட அம்சங்கள், திரைப்பட விழாவில்

இடம்பெறும் வாய்ப்பு உருவாகி உள்ளது. இளம் திரைப்பட தயாரிப்பாளர்களின் படைப்பாற்றல், தொலை நோக்குத் திறன் மற்றும் தனித்துவமான கதை சொல்லும் அணுகுமுறை போன்றவற்றை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பாக அமையும் என்று மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

-------------------------------

<u>அரவிந்த் கெஜ்ரிவால்</u> (10)

டெல்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், 2 நாட்களுக்கு பிறகு தமது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய உள்ளதாக அறிவித்துள்ளார். இதுதொடர்பாக இன்னும் ஓரிரு நாட்களில் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு செய்ய உள்ளதாக அவர் கூறியுள்ளார். அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள டெல்லி சட்டப் பேரவைத் தேர்தலை, மஹாராஷ்ட்ரா மாநில தேர்தலுடன், இந்த ஆண்டு நவம்பரில் நடத்த வேண்டும் என்றும், அவர் கோரிக்கை விடுத்துள்ளார். புதுடெல்லியில் இன்று கட்சி அலுவலகத்தில் தொண்டர்களிடம் பேசிய அவர், மக்கள் தீர்ப்பு வழங்கும் வரை, முதலமைச்சர் நாற்காலியில் அமர மாட்டேன் என்றும் தெரிவித்தார்.